## வரலாற்றுப் பின்னணி

## மாநில சட்டப்பேரவை – தோற்றமும் வளர்ச்சியும்

### 1. விடுதலைக்கு முந்தைய வரலாற்றின் சுருக்கம்

முன்னாள் சென்னை மாகாணத்தின் ஒரு பகுதிதான் தற்போதைய தமிழ்நாடு. மதராஸ் மாகாணம் என்பது தற்போதைய தமிழ்நாடு, ஒடிஷா மாநிலத்தின் சில பகுதிகள், கேரளா, கர்நாடகா, தெலுங்கானா மற்றும் பண்டைய நிஜாம் பகுதி நீங்கலான ஆந்திர பிரதேசம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். மதராஸ் மாகாணத்தைத் தவிர, பம்பாய் மாகாணம் மற்றும் கல்கத்தா மாகாணம் ஆகிய இரண்டு மாகாணங்கள் இருந்தன. ஒவ்வொரு மாகாணமும் ஒரு ஆளுநரின் பொறுப்பில் இருந்தது. ஆரம்பத்தில், இம்மாகாணங்கள் அனைத்தும் தன்னிச்சையாக செயல்பட்டன. பின்பு, ஒழுங்குமுறை சட்டம், 1773–ன்படி வங்காளத்தின் கவர்னர் என்ற பதவி வங்காளத்தின் கவர்னர் ஜெனரல் என பெயர்மாற்றம் செய்யப்பட்டு, அவர் அனைத்து மாகாணங்களின் தலைமை நிருவாகியாக நியமிக்கப்பட்டார். அதே நேரத்தில், மாகாணங்களின் சட்டம் இயற்றும் அதிகாரம் அங்கீகரிக்கப்பட்டது. எனினும், பட்டயச் சட்டம், 1833–ன்படி இந்நிலை நிறுத்தப்பட்டு, சட்டம் இயற்றும் அதிகாரம் கவர்னர்–ஜெனரல்–இன்–கவுன்சில் அவர்களிடம் முழுமையாக ஒப்படைக்கப்பட்டு, மாகாணங்களின் சட்டம் இயற்றும் அதிகாரம் தடை செய்யப்பட்டது. பட்டயச் சட்டம், 1833–ன்மூலம் தடை செய்யப்பட்ட சட்டம் இயற்றும் அதிகாரம் 1861 ஆம் ஆண்டைய இந்திய அரசுச் சட்டத்தின்மூலம் மாகாணங்களுக்கு மீண்டும் வழங்கப்பட்டது. "அமைதி மற்றும் நல்லாட்சி" செய்யும் பொருட்டு சென்னை மாகாண சட்டப்பேரவைக்கு சட்டம் இயற்றும் அதிகாரம் வழங்கப்பட்டது. சட்டமியற்றும் காரணங்களுக்காக தலைமை வழக்கறிஞர் மற்றும் நான்கிலிருந்து எட்டு தற்காலிக உறுப்பினர்கள் கூடுதலாக சேர்க்கப்பட்டு கவர்னரின் நிருவாகக் குழு விரிவாக்கப்பட்டது. இவ்வுறுப்பினர்களில் பாதி உறுப்பினர்கள் கவர்னர் அவர்களால் இரண்டாண்டுகளுக்கு நியமிக்கப்பட்ட அலுவல் சார்பற்ற உறுப்பினர்களாவர். மைய சட்டப்பேரவையால் இயற்றப்பெறும் சட்டங்களில் மாகாண சட்டமன்ற மேலவை தலையிட முடியாது. மாகாண சட்டமன்ற மேலவைகளால் இயற்றப்பெறும் சட்டமுன்வடிவுகள் கவர்னர் ஜெனரலின் ஒப்புதலுக்கு உட்பட்டவையாகும். ஒப்புதலுக்கு பிறகும், அச்சட்டமுன்வடிவுகள் அரசியின் பார்வைக்கு அனுப்பப்படும்போது அதனை நிராகரிக்கும் உரிமை அவருக்கு உண்டு.

மாகாண சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை 20–லிருந்து 50 ஆக இந்திய கவுன்சில்கள் சட்டம், 1909 விரிவுபடுத்தியது. முதன்முறையாக மறைமுகத் தேர்தலின்மூலம் சட்டமன்ற மேலவையின் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதால், அலுவல் சார்பற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை முதன்முறையாக அவையில் பெரும்பான்மையைப் பெற்றது.

1919 ஆம் இயற்றப்பட்ட மாண்டேகு–செம்ஸ்ஃபோர்டு சீர்திருத்தங்கள் பொறுப்புடைய ஆட்சியை நோக்கிய முதல் பயணமாக அமைந்தது.

இந்திய அரசு சட்டம், 1919–ன்படி 1921–ல் மதராஸ் சட்டமன்ற மேலவை அமைக்கப்பட்டது. மேலவையின் பதவிகாலம் 3 மூன்றாண்டுகள் என நிர்ணயிக்கப்பட்டது. மேலவையின் 132 உறுப்பினர்களில் 34 உறுப்பினர்கள் கவர்னரால் நியமிக்கப்பட்டனர். மீதமுள்ள உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1921 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9 ஆம் நாள் சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையில் முதன்முறையாக இம்மேலவை கூடியது. கவர்னர் வெல்லிங்டன் பிரபு கேட்டுக்கொண்டதற்கிணங்க இங்கிலாந்து அரசரின் தந்தைவழி மாமனான கன்னாட் பிரபுவால் மேலவை 1921 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12 ஆம் நாள் தொடங்கி வைக்கப்பட்டது. 1921 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 14 ஆம் நாள் நடைபெற்ற மேலவைக் கூட்டத்தில் கவர்னர் அவர்கள் உரையாற்றினார். இரண்டாம் மற்றும் மூன்றாம் மேலவை முறையே 1923 மற்றும் 1926 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்குப்பின் இந்திய அரசு சட்டத்தின்படி அமைக்கப்பட்டன. நான்காம் சட்டமன்ற மேலவை பொதுத் தேர்தலுக்குப் பிறகு முதன்முறையாக 1930 ஆம் ஆண்டு நவம்பர் 6 ஆம் நாள் கூடியது. அம்மேலவையின் பதவிகாலம் அவ்வப்போது நீட்டிக்கப்பட்டு 1935 ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டத்தின்படியான மாகாண தன்னாட்சி நடைமுறைக்கு வரும்வரை செயல்பாட்டில் இருந்தது.

இந்திய அரசு சட்டம், 1935 சட்டமன்றங்களின் அடுத்தகட்ட பரிணாம வளர்ச்சிக்கு அடிப்படையாக விளங்கியது. அனைந்திந்திய கூட்டமைப்பிற்கும், கூட்டமைப்பின் தொகுதி அலகிற்கும் வழிவகை செய்யப்பட்ட இச்சட்டம் கவர்னரின் மாகாணத்திற்கும் இந்திய மாநிலங்களுக்குமான சட்டமாக அமைந்தது. இச்சட்டத்தின்படி மதராஸ் மாகாணத்தில் இரு அவை கொண்ட சட்டமன்றம் நிறுவப்பட்டு, பின்னர் அது 215 உறுப்பினர்களைக் கொண்ட சட்டமன்றப் பேரவை என்றும் 56 உறுப்பினர்களைக் கொண்ட சட்டமன்ற மேலவை என்றும் அழைக்கப்பட்டது.

பொதுத் தேர்தலுக்குப் பிறகு முதல் சட்டமன்றப் பேரவை இச்சட்டத்தின்படி 1937 ஆம் ஆண்டு ஜூலை மாதம் அமைக்கப்பெற்றது. சட்டமன்றம் என்பது கவர்னர் மற்றும் மாகாண சட்டமன்றப் பேரவை மற்றும் மாகாண சட்டமன்ற மேலவை ஆகிய இரண்டு அவைகளையும் உள்ளடக்கியதாகும். சட்டமன்ற மேலவை கலைக்கும் தன்மையற்ற நிரந்தரமான அவையாகும். ஆனால், இவ்வவையின் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை ஓய்வு பெற்றனர். சட்டமன்ற மேலவை குறைந்தபட்சம் 54 உறுப்பினர்களையும் அதிகபட்சம் 56 உறுப்பினர்களையும் கொண்டது. இவற்றுள் 35 இருக்கைகள் பொதுப்பிரிவிற்கும், 7 இருக்கைகள் முகமதியர்களுக்கும், 1 இருக்கை ஐரோப்பியருக்கும், 3 இருக்கை இந்திய கிருத்துவர்களுக்கும், குறைந்தபட்சம் 8

அதிகபட்சம் 10 இருக்கைகள் கவர்னரால் நியமிக்கப்படும் உறுப்பினர்களுக்கும் ஒதுக்கப்பெற்றது. சட்டமன்றப் பேரவையின் 215 உறுப்பினர்களுள், பொதுப் பிரிவில் 146 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவற்றில் 30 இருக்கைகள் தாழ்த்தப்பட்ட உறுப்பினர்களுக்குமென ஒதுக்கப்பட்டுள்ளது. வாக்காளர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நபர்களால் நிரப்பப்படும் இருக்கைகளுள் 1 இருக்கை பிற்படுத்தப்பட்ட மற்றும் பழங்குடி இனத்தவருக்கும், 28 இருக்கைகள் முகமதியர்களுக்கும், 2 இருக்கைகள் ஆங்கிலோ இந்தியர்களுக்கும், 3 இருக்கைகள் ஐரோப்பியர்களுக்கும், 8 இருக்கைகள் இந்திய கிருத்துவர்களுக்கும், 6 இருக்கைகள் வணிகவியல் மற்றும் தொழில்கள் போன்றவற்றின் பிரதிநிதிகளுக்கும், 6 இருக்கைகள் நில உரிமையாளர்களுக்கும், 1 இருக்கை பல்கலைக்கழகத்திற்கும், 6 இருக்கைகள் தொழிலாளர் பிரிதிநிதிகளுக்கும் மற்றும் 8 இருக்கைகள் மகளிருக்கும் ஒதுக்கப்பட்டன. மகளிருக்கு ஒதுக்கப்பட்ட 8 இருக்கைகளில், 6 இருக்கைகள் பொதுப் பிரிவினருக்கும் ஒதுக்கப்பெற்றன.

1935 ஆம் ஆண்டில் இந்திய அரசு சட்டம் நிறைவேற்றப்பட்டிருப்பினும், மாகாணம் சார்ந்த பகுதி மட்டும் 1937 ஆம் ஆண்டு நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. சட்டமன்றத்திலுள்ள காங்கிரஸ் கட்சி 1937 ஆம் ஆண்டு ஜூலை மாதம் அரசாட்சியை அமைத்தது. எனினும், இரண்டாம் உலகப் போரை முன்னிட்டு நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப்பட்ட காரணத்தால் இவ்வமைச்சகம் 1939 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இராஜினாமா செய்ததைத் தொடர்ந்து சட்டமன்றத்தின் செயல்பாடு நிறுத்தப்பட்டது. உலகப் போர் முடிவுற்றதையடுத்து, இந்திய அரசு சட்டம், 1935—ன்படி 1946 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டது. இந்திய அரசு சட்டம், 1935—ன்படி 1946 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இரண்டாவது சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத்தொடர் 1946 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆம் நாள் நடைபெற்றது.

இந்திய விடுதலை சட்டம் 1947—ன்படி இந்தியா பாகிஸ்தான் எனும் இரண்டு சுயாட்சி பகுதிகள் உருவாக்கப்பட்டு, பிரிட்டன் அரசின் மேலதிகாரம் முடிவுபெற்று, இந்தியாவிற்காக சட்டமியற்றும் பிரிட்டன் பாராளுமன்றத்தின் அதிகாரம் நிறுத்தப்பட்டது. அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வரும்வரையில், இந்திய அரசு சட்டம், 1935—ன்படி தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண சட்டமன்றங்கள் சூழ்நிலைக்கேற்ற தழுவல்களோடும் மாறுதல்களோடும் செயல்பட அதிகாரமளிக்கப்பட்டது. இந்திய அரசமைப்புச் சட்டம் 1950 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ஆம் நாள் அமலுக்கு கொண்டுவரப்பட்டு, செயல்பாட்டிலிருந்த சட்டமன்றங்கள் மாகாண சட்டமன்றங்களாக செயல்பட அனுமதிக்கப்பட்டன.

## 2. விடுதலைக்குப் பின் ஏற்பட்ட மாற்றங்கள்

முன்னாள் மதராஸ் மாகாணத்தின் முதல் சட்டப்பேரவையானது உரிய வயதுடையோருக்கு வாக்குரிமை அளித்தலின் அடிப்படையில் ஜனவரி, 1952–ல் நடைபெற்ற முதல் பொதுத் தேர்தலுக்குப் பின் மார்ச் 1, 1952 அன்று அமைக்கப்பட்டது.

குடியரசுத் தலைவரால் வழங்கப்பட்ட நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற தொகுதிகள் எல்லை வரையறுத்தல் (மதராஸ்) ஆணை, 1951, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1950, பிரிவு 6 மற்றும் 9–ன்படி ஒருங்கிணைந்த மதராஸ் சட்டமன்றம் என்பது 309 தொகுதிகளுள் பிரிக்கப்பட்ட 375 இடங்களைக் கொண்டது. இதில் 243 ஒற்றை உறுப்பினர் தொகுதிகளும், ஒவ்வொன்றிலும் தாழ்த்தப்பட்ட இன மக்களுக்கு ஒரு இடம் ஒதுக்கப்பட்ட 62 இரட்டை உறுப்பினர் தொகுதிகளும், ஒவ்வொன்றிலும் மலைவாழ் இன மக்களுக்கு ஒரு இடம் ஒதுக்கப்பட்ட 4 இரட்டை உறுப்பினர் தொகுதிகளும் உள்ளடங்கும். இவ்வாறு ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு போட்டியின்றி உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். இவை தவிர உள்ள 372 இடங்களுக்கு மட்டுமே தேர்தல் நடைபெறும். மேலும், ஆங்கிலோ–இந்தியர்களின் பிரதிநிதித்துவத்திற்காக அரசியலமைப்புச் சட்டம், பிரிவு 333–ன்படி அவர்களுள் ஒருவரை ஆளுநர் உறுப்பினராக நியமனம் செய்வார்.

அக்டோபர் 1, 1953 அன்று ஒருங்கிணைந்த மதராஸ் மாநிலத்திலிருந்த தெலுங்கு பேசும் மக்கள் வசிக்கும் இடங்களை சேர்த்து ஆந்திர மாநிலம் உருவாக்கப்பட்டதாலும், கன்னடம் பேசும் இடமான பெல்லாரி மாவட்டமானது மைசூர் மாநிலத்துடன் சேர்க்கப்பட்டதாலும் சட்டமன்றத்தின் மொத்த எண்ணிக்கை 231 என குறைந்தது. நவம்பர் 1, 1956 அன்று நடைமுறைக்கு கொண்டுவரப்பட்ட மாநிலங்கள் மறுசீரமைப்புச் சட்டம், 1956–ன்படி முன்னாள் மலபார் மாவட்டங்கள் கேரள மாநிலத்துடன் இணைக்கப்பட்டது. இதனால், சட்டமன்றத்தின் மொத்த எண்ணிக்கை 190 ஆக மேலும் குறைந்தது. கேரளாவின் தமிழ் பேசும் பகுதிகளும் (இன்றைய கன்னியாகுமரி மாவட்டம்) செங்கோட்டை தாலுகாவும் மதராஸ் மாநிலத்துடன் இணைக்கப்பட்டன. இதனையொட்டி, மாநிலங்கள் மறுசீரமைப்புச் சட்டம், 1956–ன்படி, மதராஸ் சட்டமன்றப் பேரவையின் மொத்த எண்ணிக்கை 205 ஆக உயர்ந்தது. இவற்றுள் 167 தொகுதிகளும், ஒவ்வொன்றிலும் தாழ்த்தப்பட்ட இன மக்களுக்கு ஒரு இடம் ஒதுக்கப்பட்ட 37 இரட்டை உறுப்பினர் தொகுதிகளும், மலைவாழ் இன மக்களுக்கு ஒரு இடம் ஒதுக்கப்பட்ட 1 இரட்டை உறுப்பினர் தொகுதியும் உள்ளடங்கும்.

மார்ச், 1957–ல் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்குப் பிறகு ஏப்ரல் 1, 1957 அன்று இரண்டாவது சட்டமன்றப் பேரவை அமைக்கப்பட்டது. அதில் 205 தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும், ஒரு நியமிக்கப்பட்ட உறுப்பினரும் இடம்பெற்றிருந்தனர். ஆந்திர பிரதேசம் மற்றும் மதராஸ் (எல்லை மாற்றம்) சட்டம், 1959–ன் விளைவான எல்லை வரையறையின்படி இரண்டாவது சட்டமன்றப் பேரவையின் இடைப்பட்ட காலத்தில் ஆந்திர பிரதேச சட்டமன்றப் பேரவையிலிருந்து ஓர் உறுப்பினர் மதராஸ்க்கு ஒதுக்கப்பட்டதால் மதராஸ் சட்டமன்றத்தின் மொத்த எண்ணிக்கை 206 ஆக உயர்ந்தது.

1961–ல் இரட்டை உறுப்பினர் தொகுதிகள் (ஒழிப்பு) சட்டம், 1961–ன்படி 38 இரட்டை உறுப்பினர் தொகுதிகள் ஒழிக்கப்பட்டு அதற்கு இணையாக தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் இன மக்களுக்கு

என ஒற்றை உறுப்பினர் தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. இருப்பினும், மதராஸ் சட்டமன்றப் பேரவையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை மாறாமல் 206 ஆகவே இருந்தது.

பிப்ரவரி, 1962–ல் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்கு பிறகு மார்ச் 3, 1962 அன்று மூன்றாவது சட்டமன்றப் பேரவை அமைக்கப்பட்டது. அதில் பேரவை உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 206 ஆகவே தொடர்ந்தது. நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற தொகுதிகள் எல்லை வரையறுத்தல் ஆணை, 1965–ன்படி மதராஸின் தொகுதிகள் 234 ஆக உயர்த்தப்பட்டு, அவற்றில் 42 இடங்கள் தாழ்த்தப்பட்ட இன மக்களுக்கும், 2 இடங்கள் மலைவாழ் இன மக்களுக்கும் ஒதுக்கப்பட்டு, அரசியலமைப்புச் சட்டம், பிரிவு 333–ன்படி ஆங்கிலோ–இந்தியர்கள் பிரிவைச் சேர்ந்த ஒருவர் ஆளுநரால் உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டதாகப் பிரிக்கப்பட்டது.

### 3. பெயர்மாற்றம்

பிப்ரவரி, 1967–ல் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்கு பிறகு மார்ச் 3, 1967 அன்று நான்காவது சட்டமன்றப் பேரவை அமைக்கப்பட்டது. 234 தொகுதிகளைக் கொண்ட இந்தப் பேரவையில் 42 இடங்கள் தாழ்த்தப்பட்ட இன மக்களுக்காகவும், 2 இடங்கள் மலைவாழ் இன மக்களுக்காகவும் ஒதுக்கப்பட்டு, ஒரு உறுப்பினர் நியமனம் செய்யப்பட்டவராய் இருந்தார். இப்பேரவையின் காலத்தில், ஜூலை 18, 1967 அன்று, பேரவையால் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், மதராஸ் மாநிலத்தை "தமிழ்நாடு" என பெயர்மாற்றம் செய்ய ஏதுவாக இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள மாநில அரசால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனக் கூறப்பட்டது. அதன்படி, மதராஸ் மாநில (பெயர்மாற்றம்) சட்டம், 1968 (1968–ன் மத்திய சட்டம் 53) பாராளுமன்றத்தால் இயற்றப்பட்டு, ஜனவரி 14, 1969 அன்று நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. இதன் விளைவாக, "மதராஸ் சட்டமன்றப் பேரவை" என்ற பெயர் "தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை" என பெயர்மாற்றம் செய்யப்பட்டது."

1967–லிருந்து, சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை நியமன உறுப்பினரையும் சேர்த்து 234 ஆகவே தொடர்ந்தது.

மார்ச் 1971–ல் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்கு பிறகு மார்ச் 15, 1971 அன்று ஐந்தாவது சட்டமன்றப் பேரவை அமைக்கப்பட்டது. 234 தொகுதிகளைக் கொண்ட இந்தப் பேரவையில் 42 இடங்கள் தாழ்த்தப்பட்ட இன மக்களுக்காகவும், 2 இடங்கள் மலைவாழ் இன மக்களுக்காகவும் ஒதுக்கப்பட்டு, ஒரு உறுப்பினர் நியமனம் செய்யப்பட்டவராய் இருந்தார். பேரவையின் நிர்ணயிக்கப்பட்ட காலம் முடிவடையும் முன், ஜனவரி 31, 1976 அன்று, அரசியலமைப்புச் சட்டம், பிரிவு 356–ன்படி ஐந்தாவது சட்டமன்றப் பேரவையை கலைத்து, குடியரசுத் தலைவரின் ஆட்சி தமிழ்நாட்டில் முதன்முதலில் அமைய குடியரசுத் தலைவர் பிரகடனப்படுத்தினார்.

ஜூன் 1977–ல் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்கு பிறகு ஜூன் 30, 1977 அன்று ஆறாவது சட்டமன்றப் பேரவை அமைக்கப்பட்டது. 1971 ஆம் ஆண்டைய மக்கள் தொகை கணக்கெடுப்பின்படியும் ஜனவரி 1, 1975 நாளிட்ட வரையறை குழு எண் 31–ன்படியும் வரையறுக்கப்பட்டவாறு 234 தொகுதிகளைக் கொண்ட இந்தப் பேரவையில் 42 இடங்கள் தாழ்த்தப்பட்ட இன மக்களுக்காகவும், 2 இடங்கள் மலைவாழ் இன மக்களுக்காகவும் ஒதுக்கப்பட்டது. பேரவையின்

நிர்ணயிக்கப்பட்ட காலம் முடிவடையும் முன், பிப்ரவரி 17, 1980 அன்று, அரசியலமைப்புச் சட்டம், பிரிவு 356—ன்படி ஆறாவது சட்டமன்றப் பேரவையை கலைத்து, குடியரசுத் தலைவரின் ஆட்சி தமிழ்நாட்டில் அமைய குடியரசுத் தலைவர் பிரகடனப்படுத்தினார்.

1979—ல் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற தொகுதிகள் எல்லை வரையறுத்தல் ஆணை, 1976—ன்படி '157. உப்பிலியாபுரம் பொது தொகுதி' என்பது '157. உப்பிலியாபுரம் (ஆ.வா.) தொகுதி' என மாற்றப்பட்டது (எந்தத் தொகுதியின் வரையறையினையும் மாற்றாமல்).

மே 1980—ல் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்கு பிறகு ஜூன் 9, 1980 அன்று ஏழாவது சட்டமன்றப் பேரவை அமைக்கப்பட்டது. 1971 ஆம் ஆண்டைய மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இது அமையப்பெற்றது. 234 தொகுதிகளைக் கொண்ட இந்தப் பேரவையில் 42 இடங்கள் தாழ்த்தப்பட்ட இன மக்களுக்காகவும், 3 இடங்கள் மலைவாழ் இன மக்களுக்காகவும் ஒதுக்கப்பட்டன.

டிசம்பர் 24, 1984 அன்று நடைபெற்ற பொதுத் தேர்தலுக்கு பிறகு ஜனவரி 16, 1985 அன்று எட்டாவது சட்டமன்றப் பேரவை அமைக்கப்பட்டது. பேரவையின் நிர்ணயிக்கப்பட்ட காலம் முடிவடையும் முன், ஜனவரி 30, 1988 அன்று, அரசியலமைப்புச் சட்டம், பிரிவு 356—ன்படி எட்டாவது சட்டமன்றப் பேரவையை கலைத்து, குடியரசுத் தலைவரின் ஆட்சி தமிழ்நாட்டில் அமைய குடியரசுத் தலைவர் பிரகடனப்படுத்தினார்.

எட்டாவது சட்டமன்றப் பேரவையில், மே 14, 1986 அன்று சட்டமன்ற மேலவையைக் கலைக்க தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அதன்பின், தமிழ்நாடு சட்டமன்ற மேலவை (கலைப்பு) சட்டமுன்வடிவு, 1986 என்ற சட்டமுன்வடிவு பாராளுமன்றத்தின் இரண்டு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டு, குடியரசுத் தலைவரின் ஒப்புதல் ஆகஸ்டு 30, 1986—ல் பெறப்பட்டது. அச்சட்டம் நவம்பர் 1, 1986 அன்றிலிருந்து நடைமுறைக்கு வந்தது. அதன்படி, நவம்பர் 1, 1986—லிருந்து தமிழ்நாடு சட்டமன்ற மேலவை கலைக்கப்பட்டது.

இந்திய அரசுச் சட்டம், 1935—ன்படி உருவாக்கப்பட்ட இருஅவை சட்டமன்ற முறையானது நவம்பர் 1, 1986—லிருந்து ஓர்அவை சட்டமன்றமாக மாறியது.

ஜனவரி 21, 1989 அன்று நடைபெற்ற பொதுத் தேர்தலுக்கு பிறகு ஜனவரி 27, 1989 அன்று ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை அமைக்கப்பட்டது. பேரவையின் நிர்ணயிக்கப்பட்ட காலம் முடிவடையும் முன், ஜனவரி 30, 1991 அன்று, அரசியலமைப்புச் சட்டம், பிரிவு 356—ன்படி ஒன்பதாவது சட்டமன்றப் பேரவையை கலைத்து, குடியரசுத் தலைவரின் ஆட்சி தமிழ்நாட்டில் அமைய குடியரசுத் தலைவர் பிரகடனப்படுத்தினார்.

ஒன்பதாவது சட்டமன்றப் பேரவையில், தமிழ்நாடு சட்டமன்ற மேலவையினை மீள்கொணர பிப்ரவரி 20, 1989 அன்று அரசுத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அதன்பின், தமிழ்நாடு மற்றும் ஆந்திர பிரதேசம் ஆகிய மாநிலங்களில் சட்டமன்ற மேலவையை உருவாக்க மாநிலங்களவையில் சட்டமன்ற மேலவை சட்டமுன்வடிவு, 1990 என்ற சட்டமுன்வடிவு மே 10, 1990 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, மே 28, 1990 அன்று நிறைவேற்றப்பட்டது. ஆனால், மக்களவையில் அச்சட்டமுன்வடிவு நிறைவேற்றப்படவில்லை.

ஜூன் 15, 1991 அன்று நடைபெற்ற பொதுத் தேர்தலுக்கு பிறகு ஜூன் 24, 1991 அன்று பத்தாவது சட்டமன்றப் பேரவை அமைக்கப்பட்டது. இப்பேரவையின் முதல் கூட்டத்தொடரின் முதல் கூட்டம் ஜூலை 1, 1991 அன்று ஆரம்பித்ததால், அதன் பதவிக் காலம் ஜூன் 30, 1996–உடன் முடிவடைந்திருக்க வேண்டும். ஆனால், பதினோராவது சட்டமன்றப் பேரவைக்கான பொதுத் தேர்தல் ஏப்ரல் 27, 1996 மற்றும் மே 2, 1996 ஆகிய நாட்களில் நடைபெற்றதால், பத்தாவது சட்டமன்றப் பேரவை மே 13, 1996 அன்று முற்பகலில் ஆளுநரால் கலைக்கப்பட்டது.

சட்டமன்ற மேலவையை மீள்கொணர பிப்ரவரி 20, 1989 அன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இரத்து செய்ய பத்தாவது சட்டமன்றப் பேரவையில் அக்டோபர் 4, 1991 அன்று அரசுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஏப்ரல் 27, 1996 மற்றும் மே 2, 1996 ஆகிய நாட்களில் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்கு பிறகு மே 13, 1996 அன்று பதினோராவது சட்டமன்றப் பேரவை அமைக்கப்பட்டது. இப்பேரவையின் முதல் கூட்டத்தொடரின் முதல் கூட்டம் மே 22, 1996 அன்று ஆரம்பித்ததால், அதன் பதவிக் காலம் மே 21, 2001–உடன் முடிவடைந்திருக்க வேண்டும். ஆனால், பன்னிரண்டாவது சட்டமன்றப் பேரவைக்கான பொதுத் தேர்தல் மே 10, 2001 அன்று நடைபெற்றதால், பதினோராவது சட்டமன்றப் பேரவை மே 14, 2001 அன்று ஆளுநரால் கலைக்கப்பட்டது.

பதினோராவது சட்டமன்றப் பேரவையில், சட்டமன்ற மேலவையினை மீண்டும் உருவாக்க ஜூலை 26, 1996 அன்று அரசுத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

மே 10, 2001 அன்று நடைபெற்ற பொதுத் தேர்தலுக்கு பிறகு மே 14, 2001 அன்று பன்னிரண்டாவது சட்டமன்றப் பேரவை அமைக்கப்பட்டது. இப்பேரவையின் முதல் கூட்டத்தொடரின் முதல் கூட்டம் மே 22, 2001 அன்று ஆரம்பித்ததால், அதன் பதவிக் காலம் மே 21, 2006 உடன் முடிவடைந்திருக்க வேண்டும். ஆனால், பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவைக்கான பொதுத் தேர்தல் மே 8, 2006 அன்று நடைபெற்றதால், பன்னிரண்டாவது சட்டமன்றப் பேரவை மே 12, 2006 அன்று ஆளுநரால் கலைக்கப்பட்டது.

சட்டமன்ற மேலவையை மீள்கொணர ஜூலை 26, 1996 அன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இரத்து செய்ய பன்னிரண்டாவது சட்டமன்றப் பேரவையில் செப்டம்பர் 12, 2001 அன்று அரசுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மே 8, 2006 அன்று நடைபெற்ற பொதுத் தேர்தலுக்கு பிறகு மே 12, 2006 அன்று பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை அமைக்கப்பட்டது. இப்பேரவையின் முதல் கூட்டத்தொடரின் முதல் கூட்டம் மே 17, 2006 அன்று ஆரம்பித்ததால், அதன் பதவிக் காலம் மே 16, 2011 உடன் முடிவடைந்திருக்க வேண்டும். ஆனால், பதினான்காவது சட்டமன்றப் பேரவைக்கான பொதுத் தேர்தல் மே 13, 2011 அன்று நடைபெற்றதால், பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை மே 14, 2011 அன்று ஆளுநரால் கலைக்கப்பட்டது.

பதின்மூன்றாவது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பதின்மூன்றாவது, பதினான்காவது மற்றும் பதினைந்தாவது கூட்டத்தொடர் புதிய சட்டமன்றப் பேரவை–தலைமைச் செயலக வளாகம்,

ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சட்டமன்றப் பேரவை கூட்ட அறை, சென்னை–2–ல் மார்ச் 19, 2010 அன்று துவங்கி நடைபெற்றது.

பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவையில், தமிழ்நாடு சட்டமன்ற மேலவையினை மீள்கொணர ஏப்ரல் 12, 2010 அன்று அரசுத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அதன்பின், தமிழ்நாடு சட்டமன்ற மேலவையை உருவாக்க மாநிலங்களவையில் சட்டமன்ற மேலவை சட்டமுன்வடிவு, 2010 என்ற சட்டமுன்வடிவு மே 5, 2010 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, மாநிலங்களவையில் மே 5, 2010 அன்றும், மக்களவையில் மே 6, 2010 அன்றும் நிறைவேற்றப்பட்டது. மே 18, 2010 அன்று குடியரசுத் தலைவர் அச்சட்டமுன்வடிவிற்கு ஒப்புதல் வழங்கிய பின் மே 18, 2010 அன்று மத்திய சட்டம் எண் 16, 2010 ஆக இந்தியாவின் அரசிதழில் சிறப்பு பிரதியாக வெளியிடப்பட்டது. அது மீண்டும் தமிழ்நாடு அரசிதழில் சிறப்பு பிரதியாக மே 20, 2010 அன்று மறுவெளியீடாக வந்தது. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையினை கலைக்கும் வரை தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உருவாக்கப்படவில்லை.

மே 13, 2011 அன்று நடைபெற்ற பொதுத் தேர்தலுக்கு பிறகு மே 14, 2011 அன்று பதினான்காவது சட்டமன்றப் பேரவை அமைக்கப்பட்டது. 2001 ஆம் ஆண்டைய மக்கள் தொகை கணக்கெடுப்பின்படியும் வரையறை குழு எண் 52, 2007–ன்படியும் வரையறுக்கப்பட்டவாறு 234 தொகுதிகளைக் கொண்ட இந்தப் பேரவையில் 44 இடங்கள் தாழ்த்தப்பட்ட இன மக்களுக்காகவும், 2 இடங்கள் மலைவாழ் இன மக்களுக்காகவும் ஒதுக்கப்பட்டது. பதினான்காவது சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத்தொடரின் முதல் கூட்டம் சட்டமன்றப் பேரவை கூட்ட அறை, செயின்ட் ஜார்ஜ் கோட்டை, சென்னை–9–ல் மே 23, 2011 அன்று நடைபெற்றது. அதன்படி இப்பேரவையின் பதவிக் காலம் மே 22, 2016–உடன் முடிவடைந்திருக்க வேண்டும். ஆனால், பதினைந்தாவது சட்டமன்றப் பேரவைக்கான பொதுத் தேர்தல் மே 16, 2016 அன்று நடைபெற்றதால், பதினான்காவது சட்டமன்றப் பேரவை மே 21, 2016 அன்று ஆளுநரால் கலைக்கப்பட்டது.

தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உருவாக்கப்பட வேண்டும் என்ற முடிவை திரும்பப்பெறுதலுக்கு உண்டான அரசுத் தீர்மானம் ஜூன் 7, 2011 அன்று சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்டது.

பதினான்காவது சட்டமன்றப் பேரவையின் காலத்தில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் வைர விழா நவம்பர் 30, 2012 அன்று கொண்டாடப்பட்டது. அன்றைய குடியரசுத் தலைவர் மேதகு திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள் விழாவில் கலந்துகொண்டார். இதனையொட்டி ஒரு நினைவு மலர் வெளியிடப்பட்டது.

மே 16, 2016 அன்று நடைபெற்ற பொதுத் தேர்தலுக்கு பிறகு மே 21, 2016 அன்று பதினைந்தாவது சட்டமன்றப் பேரவை அமைக்கப்பட்டது. 2001 ஆம் ஆண்டைய மக்கள் தொகை கணக்கெடுப்பின்படியும் வரையறை குழு எண் 52, 2007–ன்படியும் வரையறுக்கப்பட்டவாறு 234 தொகுதிகளைக் கொண்ட இந்தப் பேரவையில் 44 இடங்கள் தாழ்த்தப்பட்ட இன மக்களுக்காகவும், 2 இடங்கள் மலைவாழ் இன மக்களுக்காகவும் ஒதுக்கப்பட்டது. பதினைந்தாவது சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத்தொடரின் முதல் கூட்டம் சட்டமன்றப் பேரவை கூட்ட அறை, செயின்ட் ஜார்ஜ் கோட்டை, சென்னை–9–ல் மே 25, 2016 அன்று நடைபெற்றது.

## இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி நிர்ணயிக்கப்பட்ட அடுத்தடுத்த சட்டமன்ற பேரவையின் வரையறை குறித்த விவரங்கள்

இந்திய அரசியலமைப்புச் சட்டம் 1950 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ஆம் நாள் நடைமுறைக்கு வந்த பிறகு, முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை 1952 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் நாள் அமைக்கப்பட்டது. 1952 ஆம் ஆண்டு முதல், பொதுத் தேர்தல்கள் நடைபெற்ற நாள் மற்றும் மாதம், அரசியலமைப்பின் தேதி, முதல் கூட்டம் நடைபெற்ற நாள், கலைக்கப்பட்ட நாள் மற்றும் சட்டசபை நடைபெற்ற காலம் ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| வ. எண் | சட்டசபையின் எண் | காலம் | தேர்தல் நாள்/நாட்கள் | அரசியலமைப்பின் தேதி | அமைச்சர்கள் பதிவியேற்றுக் கொண்ட நாள் | முதல் கூட்டத்தொடர் தொடங்கப்பட்ட நாள் | கலைக்கப்பட்ட நாள் |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1 | முதல் சட்டசபை | 1952–57 | 2, 5, 8, 9, 11, 12, 16, 21 மற்றும் 25 ஜனவரி 1952 (9 நாட்கள்) | 1–3–1952 | 10–4–1952 | 3–5–1952 | 31–3–1957 |
| 2 | இரண்டாவது சட்டசபை | 1957–62 | 1, 4, 6, 8 மற்றும் 11 மார்ச் 1957 (5 நாட்கள்) | 1–4–1957 | 13–4–1957 | 29–4–1957 | 1–3–1962 |
| 3 | மூன்றாவது சட்டசபை | 1962–67 | 17, 19, 21 மற்றும் 24 பிப்ரவரி 1962 (4 நாட்கள்) | 3–3–1962 | 15–3–1962 | 29–3–1962 | 28–2–1967 |
| 4 | நான்காவது சட்டசபை | 1967–71 | 5, 18 மற்றும் 21 பிப்ரவரி 1967 (3 நாட்கள்) | 1–3–1967 | 6–3–1967 | 15–3–1967 | 5–1–1971 |
| 5 | ஐந்தாவது சட்டசபை | 1971–76 | 1, 4 மற்றும் 7 மார்ச் 1971 (3 நாட்கள்) | 15–3–1971 | 15–3–1971 | 22–3–1971 | 31–1–1976 |
| 6 | ஆறாவது சட்டசபை | 1977–80 | 12 மற்றும் 14 ஜூன் 1977 (2 நாட்கள்) | 30–6–1977 | 30–6–1977 | 4–7–1977 | 17–2–1980 |
| 7 | ஏழாவது சட்டசபை | 1980–84 | 28 மற்றும் 31 மே 1980 (2 நாட்கள்) | 9–6–1980 | 9–6–1980 | 19–6–1980 | 15–11–1984 |
| 8 | எட்டாவது சட்டசபை | 1985–88 | 24 டிசம்பர் 1984 (1 நாள்) | 16–1–1985 | 10–2–1985 | 25–2–1985 | 30–1–1988 |
| 9 | ஒன்பதாவது சட்டசபை | 1989–91 | 21 ஜனவரி 1989 (1 நாள்) | 27–1–1989 | 27–1–1989 | 6–2–1989 | 30–1–1991 |
| 10 | பத்தாவது சட்டசபை | 1991–96 | 15 ஜூன் 1991 (1 நாள்) | 24–6–1991 | 24–6–1991 | 1–7–1991 | 13–5–1996 |
| 11 | பதினோறாவது சட்டசபை | 1996–2001 | 27 ஏப்ரல் 1996 மற்றும் 2 மே 1996 (2 நாட்கள்) | 13–5–1996 | 13–5–1996 | 22–5–1996 | 14–5–2001 |
| 12 | பன்னிரண்டாவது சட்டசபை | 2001–2006 | 10 மே 2001 (1 நாள்) | 14–5–2001 | 14–5–2001 | 22–5–2001 | 12–5–2006 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 13 | பதின்மூன்றாவது சட்டசபை | 2006 –2011 | 8 மே 2006 (1 நாள்) | 12–5–2006 | 13–5–2006 | 17–5–2006 | 14–5–2011 |
| 14 | பதினான்காவது சட்டசபை | 2011–2016 | 13 ஏப்ரல் 2011 (1 நாள்) | 14–5–2011 | 16–5–2011 | 23–5–2011 | 21–5–2016 |
| 15 | பதினைந்தாவது சட்டசபை | 2016– | 16 மே 2016 (1 நாள்) | 21–5–2016 | 23–5–2016 | 25–5–2016 | – |

**தமிழ்நாடு மாநிலம் மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை**

இந்தியக் குடியரசின் 29 மாநிலங்களுள் ஒன்றான தமிழ்நாடு மாநிலம் வடக்கே ஆந்திரப் பிரதேசம் மற்றும் கர்நாடகம், கிழக்கே வங்காள விரிகுடா, தெற்கே இந்தியப் பெருங்கடல் மற்றும் மேற்கே கேரள மாநிலத்தால் சூழப்பட்டுள்ளது. இது 1,30,058 சதுர கிலோமீட்டர் நிலப்பரப்பையும், 2011 ஆம் ஆண்டைய மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 7,21,38,958 மக்கள் தொகையையும் கொண்டுள்ளது. தமிழ்நாடு மாநிலம் தற்போது 32 வருவாய் மாவட்டங்களைக் கொண்டுள்ளது.

1986 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1 ஆம் தேதி முதல் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை ஓர் அவை கொண்ட சட்டமன்றமாக தொடர்ந்து செயல்படுகிறது.

தற்போது தமிழ்நாடு சட்டமன்றம் ஆளுநர் மற்றும் சட்டமன்றப் பேரவையை உள்ளடக்கியதாகும். சட்டமன்றப் பேரவை 234 தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களையும் ஒரு நியமன உறுப்பினரையும் கொண்டது.

# THE STATE LEGISLATURE - ORIGIN AND EVOLUTION

## 1. BRIEF HISTORY BEFORE INDEPENDENCE

The present Tamil Nadu is the residuary part of the then erstwhile Madras Presidency. The said Presidency comprised of the present Tamil Nadu, some parts of the present State of Odisha, Kerala, Karnataka, Telangana and Andhra Pradesh excluding the former native State of Nizam. Besides Madras Presidency, there were two other Presidencies, Viz., Presidency of Bombay and Presidency of Calcutta. Each of the Presidency was in charge of a Governor. To start with, the Presidencies were Independent of each other, but the Regulating Act, 1773 termed the Governor of Bengal as Governor General of Bengal and made him the supreme head of all the Presidencies. At the same time, the legislative power in the Presidencies was also recognised. This state of thing, was however, discontinued by the Charter Act of 1833 which concentrated all the legislative powers in the Governor-General-in-Council and deprived the local Governments viz. Presidencies of their power of the independent Legislation. The Indian Councils Act of 1861 restored the Legislative Powers taken away by the Charter Act of 1833. The Legislature of the Madras Presidency was given the power to make the laws for the "peace and good Government". The Council of the Governor of Madras was enlarged for legislative purposes by the addition of the Advocate General and 4 to 8 adhoc members of whom at least half were to be non-officials nominated by the Governor for a period of two years. The Provincial Legislative Council could not interfere with the laws passed by the Central Legislature. All Bills passed by the Provincial Councils required the assent of the Governor General and even after that, they could be disallowed by the queen to whom they had to be referred to.

The Indian Councils Act of 1909 enlarged the Legislative Council of the province from 20 to 50. The Legislative council for the first time, was elected by an indirect election resulting in non-official majority in the House for the first time.

The first conscious advance in the direction of Responsible Government was the reform of 1919 known as Montague-Chelmsford Reforms.

The Madras Legislative Council was set up in 1921 under the Government of India Act, 1919. The Term of the Council was for a period of three years. It consisted of 132 Members of which 34 were nominated by the Governor and the rest were elected. It met for the first time on the 9th January 1921 at Fort St. George, Madras. The Council was inaugurated by the Duke of Connaught, a paternal uncle of the King of England, on the 12th January 1921 on the request made by the Governor Lord Wellington. The Governor addressed the Council on the 14th February 1921.The Second and Third Councils, under this Act were constituted after the general elections held in 1923 and 1926 respectively. The fourth Legislative Council met for the first time on the 6th November 1930 after the general elections held during the year and its life was extended from time to time and it lasted till the provincial autonomy under the Government of India Act, 1935 came into operation.

The Government of India Act, 1935 marked the next stride in the evolution of Legislatures. The Act provided for an All India Federation and the constituent units of

the Federation were to be the Governor's Province and Indian States. The Act established a bi-cameral Legislature in the Province of Madras as it was then called with a Legislative Assembly consisting of 215 Members and Legislative Council having 56 Members.

The first Legislative Assembly under this Act was constituted in July 1937 after general elections. The Legislature consisted of the Governor and the two Chambers called the Provincial Legislative Council and the Provincial Legislative Assembly. The Legislative Council was a permanent body not subject to dissolution, but, as nearly as one-third of the Members thereon retired every three years. It consisted of not less than 54 and not more than 56 members composed of 35 General Seats, 7 Mohameddan Seats, 1 European Seat, 3 Indian Christian Seats and not less than 8 and not more than 10 nominated by the Governor. The Legislative Assembly consisted of 215 Members of which, 146 were elected from general seats of which 30 seats were reserved for Scheduled Castes. The number of seats to be filled by persons choosen to represent various electorates were 1 for Backward Areas and Tribes, 28 for Mohameddans, 2 for Anglo-Indians, 3 for Europeans, 8 for Indian Christians, 6 for Representatives of Commerce and Industry, etc., 6 for Landholders, 1 for University, 6 for representatives of Labour and 8 for Women of which 6 were general.

Although the Government of India Act was passed in 1935, only that part relating to the Provinces came into operation in 1937. The Congress Party in the Legislature formed the Government in July 1937. The Ministry, however, resigned in October 1939 due to the proclamation of emergency on account of World War II and the Legislature ceased to function. After the war was over, General elections were held in March 1946 under the Government of India Act, 1935. The First Session of the Second Legislative Assembly under the Government of India Act 1935 constituted in 1946, met on the 24th May 1946.

Then came the Indian Independence Act, 1947, under which two independent Dominions known respectively as India and Pakistan were created and Paramountcy of the British Crown lapsed and the power of British Parliament to legislate for India ceased. The Provincial Legislatures elected under the Government of India Act, 1935 were empowered to function as such subject to certain adaptations and modifications until the Constitution came into force. The Constitution of India came into force with effect from the 26th January 1950 and the existing Legislatures was allowed to function as Provincial Legislatures.

## 2. DEVELOPMENT AFTER INDEPENDENCE

The First Legislature of the erstwhile Madras State under the Constitution of India was constituted on 1st March 1952, after the first General Elections held in January 1952 on the basis of adult suffrage.

According to the Delimitation of Parliament and Assembly Constituencies (Madras) Order, 1951 made by the President under sections 6 and 9 of the Representation of the People Act, 1950, the then Composite Madras Assembly consisted of 375 seats to be filled by election distributed in 309 Constituencies - 243 single member Constituencies, 62 double member Constituencies in each of which a seat had been reserved for Scheduled Castes and four two member Constituencies in

each of which a seat had been reserved for Scheduled Tribes. Three seats were uncontested. The elections were contested only in respect of remaining 372 seats and one Member was nominated by the Governor under Article 333 of the Constitution to represent Anglo-Indians.

On the 1st October 1953, a separate Andhra State consisting of the Telugu speaking areas, of the Composite Madras State was formed and the Kannada Speaking area of Bellary District was also merged with the then Mysore State with effect from the above date and as a consequence, the strength of the Assembly was reduced to 231. The States Reorganisation Act, 1956 came into effect from the 1st November 1956 and consequently the constituencies in the erstwhile Malabar Districts were merged with the Kerala State and as a consequence the strength of the Assembly was further reduced to 190. The Tamil speaking area of Kerala (the present Kanniyakumari District) and Shencottah taluk were added to Madras State. Subsequently, according to the State Reorganisation Act, 1956, the strength of the Madras Legislative Assembly was raised to 205 distributed in 167 territorial constituencies, 37 two-member constituencies in each of which a seat had been reserved for Scheduled Castes and one two-member constituency in which a seat had been reserved for Scheduled Tribes.

The Second Legislative Assembly which was constituted on the 1st April 1957 after the General Elections, held in March 1957 consisted of 205 elected Members besides one nominated Member. During the term of the Assembly in 1959, as result of the adjustment of Boundaries between Andhra Pradesh and the Madras (Alteration of Boundaries) Act, 1959, one member from the Andhra Pradesh Legislative Assembly was allotted to Madras and consequently the strength of the Madras Assembly was increased to 206.

During 1961, by the Two-Member Constituencies (Abolition) Act, 1961, the 38 double-member Constituencies were abolished and an equal number of single member constituencies were reserved for Scheduled Castes and Scheduled Tribes. However, there was no change in the strength of territorial constituencies in Madras Assembly which had remained as 206.

The Third Assembly was constituted on the 3rd March 1962 after the General Elections held in February, 1962. The strength of the Assembly continued to be 206. By the Delimitation of Parliamentary and Assembly constituencies Order, 1965, the number of territorial constituencies in Madras was increased to 234, out of which forty-two seats were reserved for Scheduled Castes and two seats for Scheduled Tribes besides one member nominated by the Governor from the Anglo Indian Community under Article 333 of the Constitution of India.

## 3. CHANGE IN NOMENCLATURE

The Fourth Assembly was constituted on the 1st March 1967 after the General Elections held in February, 1967. It consisted of 234 territorial Constituencies of which 42 had been reserved for the Scheduled Castes and 2 for Scheduled Tribes besides one nominated Member. During the term of this Assembly on the 18th July 1967, the House by a resolution unanimously adopted and recommended that steps be taken by the State Government to secure necessary amendment to the Constitution of India to change the name of Madras State as "Tamil Nadu". Accordingly,

the Madras State (Alteration of Name) Act, 1968(Central Act 53 of 1968) was passed by the Parliament and came into force on the 14th January 1969. Consequently, the nomenclature "Madras Legislative Assembly" was changed into "Tamil Nadu Legislative Assembly".

From 1967 onwards, the strength of the Assembly continued to remain as 234 besides a nominated member.

The Fifth Assembly was constituted on 15th March 1971 after the General Elections held in March 1971. It consisted of 234 elected members of which 42 seats were reserved for Scheduled Castes and 2 for Scheduled Tribes besides one nominated member. Before the expiry of the period of the Assembly, the President by a Proclamation issued on the 31st January 1976, under Article 356 of the Constitution, dissolved the Fifth Assembly and imposed President's Rule for the first time in Tamil Nadu.

The Sixth Assembly was constituted on the 30th June 1977, after the General Elections held in June 1977. It consisted of 234 territorial constituencies as delimited in the order of Delimitation Commission No. 31, dated 1st January 1975 with reference to 1971 Census population figures, of which 42 seats were reserved for the Scheduled Castes and 2 seats reserved for Scheduled Tribes. Before the expiry of the period of Assembly, the President by a Proclamation issued on the 17th February 1980 under the Article 356 of the Constitution, dissolved the Sixth Assembly and imposed President's Rule in Tamil Nadu.

During the year 1979, '157. Uppiliyapuram General Constituency' was converted into, '157. Uppiliyapuram (S.T.) Constituency' by way of an amendment to the Delimitation of Parliamentary and Assembly Constituencies Order, 1976 (Without altering the extent of any constituency given in such order).

The Seventh Assembly was constituted on the 9th June 1980 after the General Elections held in May 1980 for the constituencies delimited on the basis of the Census Population of 1971. It consisted of 234 Assembly constituencies out of which forty-two seats were reserved for Scheduled Castes and three seats for Scheduled Tribes.

The Eighth Assembly was constituted on the 16th January 1985 after the General Elections held on the 24th December 1984. Before the expiry of the period of Assembly, the President by a Proclamation issued on the 30th January 1988 under Article 356 of the Constitution, dissolved the Eighth Tamil Nadu Legislative Assembly and imposed President's Rule in Tamil Nadu.

During the term of Eighth Assembly, a Government resolution seeking to abolish the Legislative Council was moved and adopted by the House on the 14th May 1986. Thereafter, Tamil Nadu Legislative Council (Abolition ) Bill, 1986 was passed by both the Houses of Parliament and received the assent of the President on the 30th August 1986. The Act came into force on the 1st November 1986. The Tamil Nadu Legislative Council was thus abolished with effect from the 1st November 1986.

The bi-cameral legislature established in 1937 under the Government of India Act, 1935 has become an unicameral Legislature in Tamil Nadu from the 1st November 1986 onwards.

The Ninth Tamil Nadu Legislative Assembly was constituted on the 27th January 1989 after the General Elections held on the 21st January 1989. Before the expiry of the term of the Assembly, the President by a Proclamation issued on the 30th January, 1991, under Article 356 of the Constitution of India dissolved the Ninth Tamil Nadu Legislative Assembly and imposed President's Rule in Tamil Nadu.

During the term of the Ninth Assembly, a Government Resolution seeking the revival of the Tamil Nadu Legislative Council was moved and adopted by the House on the 20th February, 1989. Thereafter, Legislative Council Bill, 1990, seeking the creation of Legislative Council of the Tamil Nadu and Andhra Pradesh was introduced in Rajya Sabha on the 10th May, 1990 and was considered and passed by the Rajya Sabha on the 28th May, 1990. But the Bill could not be passed by the Lok Sabha.

The Tenth Tamil Nadu Legislative Assembly was constituted on the 24th June, 1991 after the General Elections held on the 15th June, 1991. The first Meeting of the First Session of the Tenth Legislative Assembly commenced on the 1st July 1991 and therefore its term would have expired on the 30th June, 1996. However, as the General Elections to the Eleventh Tamil Nadu Assembly had been held on the 27th April, 1996 and 2nd May, 1996, the Tenth Assembly was dissolved on the Forenoon of 13th May 1996 by the Governor.

During the term of the Tenth Assembly, a Government Resolution was adopted in the Assembly on the 4th October, 1991 to rescind the Resolution passed on the 20th February, 1989 for the revival of the Legislative Council in the State of Tamil Nadu.

The Eleventh Tamil Nadu Legislative Assembly was constituted on the 13th May, 1996 after the General Elections held on the 27th April, 1996 and 2nd May, 1996. The First Meeting of the First Session of the Eleventh Tamil Nadu Legislative Assembly commenced on the 22nd May 1996 and the term would obviously expire on 21st May, 2001. However, as the General Elections to the Twelfth Tamil Nadu Assembly had been held on 10th May, 2001 the Eleventh Tamil Nadu Legislative Assembly was dissolved on 14th May, 2001 by the Governor.

During the term of the Eleventh Assembly, a Government Resolution was moved and adopted in the Assembly on 26th July, 1996 seeking creation of Legislative Council in the Tamil Nadu State.

The Twelfth Tamil Nadu Legislative Assembly was constituted on the 14th May, 2001 after the General Elections held on the 10th May, 2001. The First Meeting of the First Session of the Twelfth Tamil Nadu Legislative Assembly commenced on the 22nd May, 2001 and therefore the term would obviously expire on 21st May, 2006. However, as the General Elections to the Thirteenth Tamil Nadu Assembly was held on 8th May, 2006 the Twelfth Tamil Nadu Legislative Assembly was dissolved on 12th May, 2006 by the Governor.

During the term of the Twelfth Assembly, a Government Resolution was moved and adopted in the Assembly on 12th September, 2001 to rescind the Resolution passed on the 26th July, 1996 for the revival of the Legislative Council in the State of Tamil Nadu.

The Thirteenth Tamil Nadu Legislative Assembly was constituted on the 12th May, 2006 after the General Elections held on the 8th May, 2006. The First Meeting of the First Session of the Twelfth Tamil Nadu Legislative Assembly commenced on the 17th May, 2006 and therefore the term would obviously expire on 16th May, 2011. However, as the General Elections to the Fourteenth Tamil Nadu Assembly was held on 13th May, 2011, the Thirteenth Tamil Nadu Legislative Assembly was dissolved on 14th May, 2011 by the Governor.

Beginning from 19th March, 2010, the Tamil Nadu Legislative Assembly met during the Thirteenth, Fourteenth and Fifteenth sessions of the Thirteenth Tamil Nadu Legislative Assembly in the Legislative Assembly Chamber at the New Legislative Assembly-Secretariat Complex, Omandurar Government Estate, Chennai-2.

During the term of the Thirteenth Assembly, a Government Resolution seeking the revival of the Tamil Nadu Legislative Council was moved and adopted by the House on the 12th April, 2010. Thereafter, the Tamil Nadu Legislative Council Bill, 2010, seeking the creation of Legislative Council for the State of Tamil Nadu was introduced in the Rajya Sabha on the 5th May, 2010. It was considered and passed by the Rajya Sabha on the 5th May, 2010 and passed by the Lok Sabha on the 6th May, 2010. The Bill received the assent of the President on the 18th May, 2010 and was published in an Extraordinary issue of the Gazette of India on the 18th May, 2010 as Central Act No .16 of 2010. It was republished in the Tamil Nadu Government Gazette Extraordinary dated the 20th May, 2010. The Tamil Nadu Legislative Council was not constituted till the dissolution of the 13th Tamil Nadu Legislative Assembly.

The Fourteenth Tamil Nadu Legislative Assembly was constituted on the 14th May, 2011 after the General Elections held on the 13th April, 2011. It consists of 234 territorial constituencies as delimited in the Order of Delimitation Commission no.52 of 2007 with reference to 2001 census population figures of which 44 were reserved for Scheduled Castes and two seats reserved for Scheduled Tribes. The First Meeting of the First Session of the Fourteenth Tamil Nadu Legislative Assembly was held in the Legislative Assembly Chamber, Fort St. George, Chennai - 9 on the 23rd May, 2011 and therefore the term would obviously expire on 22nd May, 2016. However, the General Elections to the Fifteenth Tamil Nadu Assembly was held on 16th May, 2016 and the Fourteenth Tamil Nadu Legislative Assembly was dissolved on 21st May, 2016 by the Governor.

A Government Resolution was moved and adopted in the Assembly on 7th June, 2011 resolving to withdraw the decision to create a Legislative Council in the State of Tamil Nadu.

During the term of the Fourteenth Assembly, Tamil Nadu Legislative Assembly celebrated its Diamond Jubilee on 30th November, 2012. His Excellency Shri Pranab Mukherjee, the President of India participated in the

celebrations. A Souvenir was released by the Chief Minister of Tamil Nadu to commemorate the memorable occasion.

The Fifteenth Tamil Nadu Legislative Assembly was constituted on the 21st May, 2016 after the General Elections held on the 16th May, 2016. It consists of 234 territorial constituencies as delimited in the Order of Delimitation Commission no.52 of 2007 with reference to 2001 census population figures of which 44 were reserved for Scheduled Castes and two seats reserved for Scheduled Tribes. The First Meeting of the First Session of the Fifteenth Tamil Nadu Legislative Assembly was held in the Legislative Assembly Chamber, Fort St. George, Chennai - 9 on the 25th May, 2016.

## DETAILS OF TERMS OF SUCCESSIVE LEGISLATIVE ASSEMBLIES CONSTITUTED UNDER THE CONSTITUTION OF INDIA

After coming into force of the Constitution of India on the 26th January, 1950, the First elected Assembly was constituted on the 1st March 1952. The details such as the dates and months during which General Elections held, the dates of Constitution, the dates of First Meeting, dates of dissolution and duration of each Assembly since 1952 are given below :-

| Sl. No | Number of Assembly | Duration | Date of Polling | Date of Constitution | Date of Council of Ministers sworn in | Date of Commencement of First session | Date of Dissolution |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1 | First Assembly | 1952-57 | 2nd, 5th, 8th, 9th, 11th, 12th, 16th, 21st and 25th January 1952. (9 days) | 1-3-1952 | 10-4-1952 | 3-5-1952 | 31-3-1957 |
| 2 | Second Assembly | 1957-62 | 1st, 4th, 6th, 8th and 11th, March 1957. (5 days) | 1-4-1957 | 13-4-1957 | 29-4-1957 | 1-3-1962 |
| 3 | Third Assembly | 1962-67 | 17th, 19th, 21st and 24th February 1962. (4 days) | 3-3-1962 | 15-3-1962 | 29-3-1962 | 28-2-1967 |
| 4 | Fourth Assembly | 1967-71 | 5th, 18th and 21st February 1967. (3 days) | 1-3-1967 | 6-3-1967 | 15-3-1967 | 5-1-1971 |
| 5 | Fifth Assembly | 1971-76 | 1st, 4th, and 7th March 1971. (3 days) | 15-3-1971 | 15-3-1971 | 22-3-1971 | 31-1-1976 |
| 6 | Sixth Assembly | 1977-80 | 12th and 14th June 1977. (2 days) | 30-6-1977 | 30-6-1977 | 4-7-1977 | 17-2-1980 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 7 | Seventh Assembly | 1980-84 | 28th and 31st May 1980. (2 days) | 9-6-1980 | 9-6-1980 | 19-6-1980 | 15-11-1984 |
| 8 | Eighth Assembly | 1985-88 | 24th December 1984. (1 day) | 16-1-1985 | 10-2-1985 | 25-2-1985 | 30-1-1988 |
| 9 | Ninth Assembly | 1989-91 | 21 st January 1989. (1 day) | 27-1-1989 | 27-1-1989 | 6-2-1989 | 30-1-1991 |
| 10 | Tenth Assembly | 1991-96 | 15th June 1991. (1 day) | 24-6-1991 | 24-6-1991 | 1-7-1991 | 13-5-1996 |
| 11 | Eleventh Assembly | 1996-2001 | 27th April 1996 and 2nd May 1996. (2 days) | 13-5-1996 | 13-5-1996 | 22-5-1996 | 14-5-2001 |
| 12 | Twelfth Assembly | 2001-2006 | 10th May 2001. (1 day) | 14-5-2001 | 14-5-2001 | 22-5-2001 | 12-5-2006 |
| 13 | Thirteenth Assembly | 2006-2011 | 8th May 2006 (1 day) | 12-5-2006 | 13-5-2006 | 17-5-2006 | 14-5-2011 |
| 14 | Fourteenth Assembly | 2011-2016 | 13th April 2011 (1 day) | 14-5-2011 | 16-5-2011 | 23-5-2011 | 21-5-2016 |
| 15 | Fifteenth Assembly | 2016- | 16th May 2016 (1 day) | 21-5-2016 | 23-5-2016 | 25-5-2016 | - |

## TAMIL NADU STATE AND TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

The State of Tamil Nadu is one of the 29 States of the Indian Republic bounded on the North by the State of Andhra Pradesh and Karnataka, on the East by the Bay of Bengal, on the South by Indian Ocean and on the West by the Kerala State. It has an area of 1,30,058 Sq. Kilometers with population of 7,21,38,958 according to 2011 census report. It presently comprises of 32 Revenue Districts.

The Tamil Nadu Legislative Assembly continues to be unicameral Legislature since 1st November, 1986.

At present, the Tamil Nadu Legislature consists of the Governor and the Legislative Assembly. The Legislative Assembly is comprised of 234 elected Members and one nominated Member.